ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2171/6 - 2020 අප්‍රේල් මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.04.16

*2171/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்*

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2152/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினைப் பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன் :-*

1. பந்தி 2 இன் உப பந்தி (ஐ) இற்கு உடனடுத்துப் பின்வரும் உப பந்தியினை உட்சேர்ப்பதன் மூலம்,

(ஒ) "சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளரின் விதிப்புரையின் பேரில், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுக்கு அமைவாக, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு (பொருள் ஒப்படைக்கப்படுபவர்) அன்பளிப்பு என அனுப்பப்பட்ட இயைபுறுமுறை பண்ட விபரம் மற்றும் குறியீட்டு முறைமை உப தலைப்புக்கள் 90.18, 90.19, 90.20 மற்றும் 90.22 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட சுகாதார உபகரணங்கள் மற்றும் சாதனங்களும் உப தலைப்பு 94.01, 94.02, 94.03, மற்றும் 94.04 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட மருத்துவமனைத் தளபாடங்கள் என்பனவும் இறக்குமதி செய்யப்படுகையில்".

2. இக்கட்டளையானது, 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, ஏப்பிறல் 16.

*07-143*

1A-PG 5023 — 567 (2020/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.